# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்




# தமிழ் மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி 2022/2023












## தகவலேடு

தமிழ் மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி நிகழ்ச்சித்திட்டமானது, தமிழ் மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் ஈடுபட விரும்பும் மாணவர்களுக்காக பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் மொழியின் பிற துறைகளுடன் தொடர்புடைய விடயங்களில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை உருவாக்குதல்
- கல்வியியல் மற்றும் வகுப்பறை செயன்முறைகள் தொடர்பான அறிவுத் திறன்கள் மற்றும் நேர்மறையான மனப்பாங்குளை ஏற்படுத்துதல்
- ஆரம்ப நிலை முதல் உயர்நிலை வகுப்புக்கள் வரையில் எந்த நிலையிலும் தமிழ் கற்பிப்பதற்கான கோட்பாடு மற்றும் செயன்முறை ரீதியிலான அறிவை வழங்குதல்
- தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு, அம்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான கோட்பாடு மற்றும் செயன்முறை அறிவை வழங்குதல்
- கற்றல் மற்றும் கற்பித்தலில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்துதல்
- தமிழ் மொழியிலிருந்து/தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்தல் மற்றும் உரைபெயர்த்தல் திறன்களை விருத்தி செய்தல்
- தமிழ் மற்றும் சிங்கள மொழிகளைக் கற்றல் மற்றும் கற்பித்தல் மூலம் பல்வேறு சமூகத்தினரிடையே சமூக இணைவு, புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கம் போன்றவற்றை மேம்படுத்தல்
- படைப்பாற்றல், புத்தாக்கம், ஊக்குவிப்புக்கள் மற்றும் பயனுள்ள தகவல் தொடர்பு மற்றும் பிற சமூகத் திறன்களின் தொழில்முறை தொடர்புகளில் வலுவான உணர்வினை வெளிப்படுத்தல்
- தமிழ் மொழி மற்றும் தமிழ் மொழி கற்பித்தல் தொடர்பான செயன்முறை ஆய்வுகளை மேற்கொண்டு அவ்வாய்வு முடிவுகளை அதனோடு தொடர்புடைய ஆய்வு மாநாடுகள் மற்றும் ஊடகங்களில் வெளிப்படுத்துதல்
- தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் தொடர்பான செயன்முறை ஆய்வுகளை மேற்கொண்டு அவ்வாய்வு முடிவுகளை அதனோடு தொடர்புடைய ஆய்வு மாநாடுகள் மற்றும் ஊடகங்களில் வெளிப்படுத்துதல்

## யாருக்காக

இந்நிகழ்ச்சித்திட்டமானது, தமிழ் மற்றும் தமிழ் இலக்கியம் கற்பித்தற் துறையில் ஈடுபட விரும்புபவர்களுக்கானது. அந்தவகையில் இது பின்வருவோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- தற்போது அரச/தனியார் நிறுவனங்களில் ஆரம்பப்பிரிவு, இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்விப் பிரிவுகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், தங்களின் தகுதிகளை விருத்தி செய்து கொண்டு தொடர்ச்சியான தொழில்சார் தகைமைகளை மேம்படுத்திக்கொள்ள விரும்புவோர்
- தமிழ் மொழியை முதன் மொழியாக/தாய் மொழியாகக் கற்பிக்கும் துறையில் ஈடுபட விரும்புவோர்
- தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் துறையில் ஈடுபட விரும்புவோர்
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தமிழ் மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் சிறப்புக்கலைமாணி பட்டமொன்றினைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர்

## கால எல்லை

நான்கு வருடங்கள் (குறைந்தபட்சம்)

## அனுமதிக்கான தகைமைகள்

(a) அனைத்து விண்ணப்பதாரிகளும் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன்,

(b) க.பொ.த உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக அல்லது அதற்கு சமமான தகுதியுடன் குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது,

(c) க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ் மற்றும் தமிழ் இலக்கியத்தில் குறைந்த பட்சம் "B" தரத்துடன் க.பொ.த உயர்தரத்தில் தமிழ் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றி குறைந்த பட்சம் மூன்று சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது,

(d) தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்தலில் (தமிழ்மொழி) தேசிய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது,

(e) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதேனும் வேறு சமமான உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## பாட உள்ளடக்கம்

### மட்டம் - 03

| | |
|---|---|
| தமிழ் மொழி – அறிமுகம் | LEU3301 |
| தமிழ் இலக்கிய வரலாறு – I | LEU3302 |
| தமிழ் இலக்கிய வரலாறு – II | LEU3303 |
| தமிழ் கல்வெட்டியல் | LEU3304 |
| தமிழ் மொழியில் படைபாக்க நுட்பங்கள் | LEU3305 |
| அறிவியல் தமிழ் - அறிமுகம் | LEU3306 |
| இலங்கைசார் கற்கைகள் | LEU3307 |
| மொழியும் தொடர்பாடலும் | LEU3308 |
| தமிழ் ஓலைச்சுவடியியல் - அறிமுகம் | LEU3309 |
| சிங்கள மொழி – அறிமுகம் | LEU3310 |
| தமிழ் மொழியின் நடைமுறை இலக்கணம் | LEU3311 |
| உலக இலக்கியம் - அறிமுகம் | LEU3312 |
| தமிழ் அகராதியியல் | LEU3313 |
| இலங்கையின் மொழிக்கொள்கை | LEU3314 |

### மட்டம் - 04

| | |
|---|---|
| இடைக்காலத் தமிழ் இலக்கியம் | LEU4315 |
| சிங்கள இலக்கியம் - அறிமுகம் | LEU4316 |
| தமிழ் மொழி வரலாறு | LEU4317 |
| நவீன தமிழ் கவிதைகள் | LEU4318 |
| தமிழ் நாடகமும் அரங்கியலும் | LEU4319 |
| இலங்கையின் கலாசாரங்கள் | LEU4320 |
| மனித உரிமைகளும் மொழியும் | LEU4321 |
| தமிழ் மொழியில் நவீனமயமாக்கல் | LEU4322 |
| இலக்கிய நயமும் திறனாய்வும் - கோட்பாடும் பிரயோகமும் | LEU4323 |
| தமிழ் மொழியில் சிறுகதைகள் | LEU4324 |
| செம்மொழி தமிழ் இலக்கியம் | LEU4325 |
| நவீன இலக்கியக் கோட்பாடுகள் | LEU4326 |
| பிற நாடுகளில் தமிழ் மொழிக் கற்கைகள் | LEU4327 |
| இலங்கை சமுதாயம் - அறிமுகம் | DSU4357 |

### மட்டம் - 05

| | |
|---|---|
| நவீன மொழியியல் | LEU5328 |
| ஈழத்து இலக்கிய வரலாறு - I | LEU5329 |
| தமிழ் நாட்டாரியல் | LEU5330 |
| தமிழ் மொழியில் நாவல்கள் | LEU5331 |
| இரண்டாம் மொழிப் பெறுகை, கற்பித்தல் மற்றும் கற்றல் தொடர்பான கோட்பாடுசார் நோக்குகள் | LEU5332 |
| உளவியல் மொழியியலும் சமுதாய மொழியியலும் | LEU5333 |
| மனித நடத்தையின் சமூக உளவியல்சார் நோக்குகள் | DSU5351 |
| மொழி கணிப்பீடு மற்றும் மதிப்பீடுசார் கோட்பாடுகளும் நடைமுறைகளும் | LEU5334 |
| மொழிசார் வகுப்பறை முகாமைத்துவம் | LEU5335 |
| மொழி கற்பித்தல் - கற்றலுக்கான தொழில்நுட்பம் | LEU5336 |
| தமிழ் மொழியில் பிழை ஆய்வு | LEU5337 |
| இலங்கையில் இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்பித்தல் தொடர்பான சிக்கல்களும் தீர்வுகளும் | LEU5338 |
| ஊடகவியலில் தமிழ்மொழி | LEU5339 |

### மட்டம் - 06

| | |
|---|---|
| கல்வியின் அடிப்படைகள் | STU6301 |
| கல்வி உளவியல் | STU6501 |
| கற்பித்தற் பயிற்சி (மட்டம் I, மட்டம் II) | LEU6740 |
| ஈழத்து இலக்கிய வரலாறு – II | LEU6341 |
| தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு கோட்பாடுகளும் நடைமுறைகளும் | LEU6342 |
| ஆய்வேடு | LEU6943 |

## கற்பித்தல் முறைமைகள்

ஒரு தொலைதூரக் கல்வி நிறுவனமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் கற்பித்தல் முறையில் வேறு நிறுவனங்களில் இருந்து குறிப்பிடத்தக்களவில் வேறுபடுகின்றது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யும் மாணவர்கள் சுய கற்றலுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள பாடப்பொதியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதன் மூலம் மாணவர்கள் சுயமாகத் தங்கள் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள். இதற்கான உதவிகள் மற்றும் வழிகாட்டல்கள் நாட்பாடசாலைகளில் நடாத்தப்படும் அமர்வுகள் மூலம் வழங்கப்படுகின்றன. நாட்பாடசாலைகள் தொடர்ச்சியான இடைவெளியில் பெரும்பாலும், வார இறுதி நாட்களில் நடாத்தப்படுகின்றன. மாணவர்கள் இத்தகைய நாட்பாடசாலை அமர்வுகளில் கலந்து கொள்ளவதோடு தொடர்ச்சியான பரீட்சைகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றார்கள்.

இந்த வகுப்புக்களுக்கான பாடத்திட்டங்கள் பெரும்பாலும் அச்சுப்பிரதிகளாகவும், ஒலிப்பதிவுகளாகவும், குறிப்புக்களாகவும் வழங்கப்படுவதோடு இலக்கியத்தில் உள்ள பெரும்பாலான நூல்கள் மற்றும் மொழி, மொழியியலில் உள்ள சில தலைப்புக்கள் காணொளிகளாகவும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றோடு பரிந்துரைக்கப்பட்ட பாடப்புத்தகங்கள், மேலதிக வாசிப்புக்கான நூல்கள் மற்றும் ஆய்வேடுகள் போன்றவற்றையும் மாணவர்கள் தங்களது சுய கற்றலுக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அத்தோடு, நாட்பாடசாலைகளில் இடம்பெறும் கலந்துரையாடல்கள், செயற்பாடுகள் மற்றும் முன்வைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

## மதிப்பீடு

இலங்கை திறந்த பல்கலைக்கழக பரீட்சை சட்ட திட்டங்களுக்கு அமைவாக, இந்நிகழச்சித்திட்டத்தில் தொடர் மதிப்பீடானது, ஒப்படைகளையும் பரீட்சைகளையும் அடிப்படையாகக்கொண்டு இடம்பெறுவதோடு ஒவ்வொரு கல்வியாண்டின் இரு பருவ இறுதிகளிலும் (Semester) இறுதிப் பரீட்சை நடாத்தப்படும். தொடர் மதிப்பீடு கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு அதில் 40 வீதமும் இறுதிப்பரீட்சையில் 60 வீதமும் கணக்கில் கொள்ளப்பட்டு இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

## பிராந்திய நிலையங்கள்

| | | |
|---|---|---|
| WP10 | - | கொழும்பு பிராந்திய நிலையம் |
| CP20 | - | கண்டி பிராந்திய நிலையம் |
| SP30 | - | மாத்தறை பிராந்திய நிலையம் |
| NC50 | - | அனுராதபுர பிராந்திய நிலையம் |
| UP80 | - | பதுளை பிராந்திய நிலையம் |
| NW70 | - | குருணாகலை பிராந்திய நிலையம் |
| SG90 | - | இரத்தினபுரி பிராந்திய நிலையம் |
| NP40 | - | யாழ்ப்பாண பிராந்திய நிலையம் |
| EP60 | - | மட்டக்களப்பு பிராந்திய நிலையம் |

## பாடநெறிக்கான கட்டணங்கள்

### மட்டம் - 03

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | Rs. | 500.00 |
| வசதிக் கட்டணம் | Rs. | 2,500.00 |
| நூலக வசதிக் கட்டணம் | Rs. | 100.00 |
| 30திறமை மட்டத்திற்கு (ஒரு திறமை மட்டத்திற்கு ரூ.1,800) | Rs. | 54,000.00 |
| மொத்தம் | Rs. | 57,100.00 |

**குறிப்பு:**

01. வெளிநாட்டு மாணவர்களுக்குரிய கட்டணங்கள் கீழ்வருமாறு
- அபிவிருத்தியடைந்த நாடுகள் (ஒரு திறமை மட்டத்திற்கு) - US$ 90
- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் (ஒரு திறமை மட்டத்திற்கு) - US$ 45

02. இந்தத் தவணைக் கட்டணங்கள் மாறுபடலாம்.

03. மாணவர்கள் தாங்கள் சித்தியடையத் தவறியப் பாடங்களுக்குத் தங்களை மீள்பதிவு செய்து கொள்வதோடு அப்பாடநெறிகளுக்குரிய கட்டணங்களை மீள செலுத்த வேண்டும் என்பதையும்

Apply **Online** only

**More information:**

www.ou.ac.lk/batamilteach
011288 1535
kchan@ou.ac.lk